தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### திருமூர்த்தி அணையிலிருந்து 9-இல் தண்ணீர் திறப்பு

**பொள்ளாச்சி,**

பிஏபி திட்டத்தில், திருமூர்த்தி அணையில் இருந்து வரும் 9-ஆம் தேதி, முதல் மண்டல பாசனத்திற்கு மூன்றாவது சுற்று தண்ணீர் திறக்கப்பட உள்ளது.

தண்ணீர் திறப்பது பற்றிய ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை மாலை பிஏபிஅலுவலகத்தில் நடைபெற்றது.

பிஏபி திட்டக்குழுத் தலைவர் மெடிக்கல் பரமசிவம் தலைமை வகித்தார். கண்காணிப்புப் பொறியாளர் இளங்கோ, செயற்பொறியாளர் செல்வராஜ் மற்றும் பகிர்மானக்குழுத் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

பிஏபி திட்டத்தில் திருமூர்த்தி அணையில் இருந்து முதல் மண்டலப் பாசனத்திற்கு மூன்றாவது சுற்று தண்ணீர் வரும் 9-ஆம் தேதி திறக்க முடிவு செய்யப்பட்டது. இரண்டாம் சுற்று தண்ணீர் கடந்த பிப்ரவரி 4-ஆம் தேதி திறக்கப்பட்டு, 24-ஆம் தேதி நிறுத்தப்பட்டது.

தற்போது, திறக்கும் தண்ணீர் 17 நாட்கள் வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் 1 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற உள்ளது.

வெள்ளிக்கிழமை போராட்டம்: பிஏபி பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் வழங்குவதில் பிரச்னை உள்ள நிலையில், புதன்கிழமை இரவு பாலாற்றில் பொதுப்பணித் துறையினர் தண்ணீர் திறந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. அதைக் கண்டித்து பிஏபி பாசன விவசாயிகள் சார்பில் வெள்ளிக்கிழமை பிஏபி அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்போவதாக பாசனசபை தலைவர் மெடிக்கல் பரமசிவம் அறிவித்துள்ளார்.

## 7,800 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

**நத்தம்,**

திண்டுக்கல் மாவட்ட கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம், நத்தம் தாலுகா அளவில் நத்தம், கோட்டைப்பட்டி, லிங்கவாடி, குட்டுப்பட்டி, சிறுகுடி, கோசுகுறிச்சி மற்றும் செந்துறை ஆகிய பகுதிகளில் உள்ள கால்நடை மையங்களில், 6ஆவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் ஒரு வாரம் நடைபெற்றது.

இதில், கறவை பசுக்கள், கிடேரி, காளை மாடுகள் மற்றும் கன்றுக் குட்டிகள் என மொத்தம் 7,800 மாடுகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டன. இந்தப் பணியில், அந்தந்தப் பகுதி கால்நடை உதவி மருத்துவர்கள், உதவியாளர்கள் ஈடுபட்டிருந்தனர். இந்த முகாம் வரும் 21ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. எனவே, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, விவசாயிகள் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## மானாமதுரையில் திடீர் மழை

**மானாமதுரை,**

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பகுதியில் வியாழக்கிழமை அதிகாலை திடீரென பெய்த மழையால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

மானாமதுரை பகுதியில் குளிர் மற்றும் பனிக்காலம் முடிந்து தற்போது வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இதனால் இரவு நேரங்களில் கடும் புழுக்கம் காரணமாக மக்கள் அவதிக்குள்ளாகும் நிலை உள்ளது. இந் நிலையில் கடந்த இரு நாள்களாக மானாமதுரை பகுதியில் பகலில் வானம் மேகமூட்டத்துடன் குளிர்ந்த காற்று வீசியது. அவ்வப்போது பன்னீர் தெளித்ததுபோல் சாரல் மழை விழுந்தது. இந்நிலையில் வியாழக்கிழமை அதிகாலை 5 மணிக்கு பலத்த மழை பெய்தது.

தொடர்ந்து அரைமணி நேரம் பெய்த மழையால் நகரில் ரோடுகளில் தண்ணீர் பெருக்கெடுத்தது. தாழ்வான இடங்களில் தண்ணீர் தேங்கியது. வெயிலின் கொடுமையை அனுபவித்து வந்த மக்களுக்கு இந்த மழை இதமாக இருந்தது.

**மரவள்ளிக் கிழங்கு விலை உயர்வு**

**பரமத்தி வேலூர்,**

பரமத்தி வேலூர் வட்டத்தில் பெருங்குறிச்சி, திடுமல், கபிலர்மலை, பரமத்தி, கூடச்சேரி, செங்கப்பள்ளி, பாலப்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மரவள்ளிக் கிழங்கு பயிர் செய்யப்பட்டுள்ளது.

இங்கு விளையும் மரவள்ளிக் கிழங்குகள் வியாபாரிகள் மூலம் நாமக்கல் அருகே உள்ள செல்லப்பம்பாளையம், மின்னாம்பள்ளி, நாமகிரிபேட்டை, தொ.ஜேடர்பாளையம், மலைவேப்பங்குட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள கிழங்கில் இருந்து மாவு தயாரிக்கும் ஆலைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

மரவள்ளிக் கிழங்கில் இருந்து ஜவ்வரிசி, சேமியா உள்ளிட்ட பொருள்கள் தயார் செய்யப்படுகின்றன. சேலம் சேகோசர்வ் மூலம் மரவள்ளிக் கிழங்கின் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. கடந்த வாரங்களில் மர வள்ளிக் கிழங்கு டன் ஒன்று ரூ.9 ஆயிரத்துக்கு ஏலம் போனது. இந்த வாரம் மரவள்ளி கிழங்கு டன் ஒன்று ரூ.11,500 வரை விற்பனையானது. மரவள்ளிக் கிழங்கின் விலை திடீர் என உயர்ந்துள்ளதால் மரவள்ளி பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பயறு வகைப் பயிர் சாகுபடியை அதிகப்படுத்தப் பயிற்சி**

**பாபநாசம்,**

தஞ்சாவூர் மாவட்டம்,பாபநாசம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பயறு வகை பயிர் சாகுபடிப் பரப்பளவை அதிகப்படுத்துதல் குறித்து விவசாயிகளுக்கு புதன்கிழமை பயிற்சியளிக்கப்பட்டது.

பாபநாசம் வேளாண் உதவி இயக்குநர் எம். சேஷன்நரேஷ்சுந்தரபாண்டியன் தலைமை வகித்தார். மாவட்ட வேளாண் துணை இயக்குநர் (மத்தியத் திட்டம்) ஜி. ராமதாஸ் முன்னிலை வகித்தார். மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஜெ.சேகர் பயிற்சியைத் தொடக்கி வைத்தார். இதில் விவசாயிகளுக்கு நெல் சாகுபடி வயல்களின் வரப்புகளில்,கரும்பு சாகுபடி வயல்களில் ஊடுபயிராக பயறுவகை பயிர்களைச் சாகுபடி செய்தல், வயல் வெளிகளில் இறவைப் பாசனம் மூலம்

பயறுவகை பயிர் சாகுபடி செய்தல் பற்றிய தொழில் நுட்ப விளக்கங்கள் குறித்து பயிற்சியளிக்கப்பட்டது. பாபநாசம் வேளாண் அலுவலர் பி.கார்த்திகேயன், வேளாண் துணை அலுவலர் டி. கொளஞ்சிநாதன்,உதவி விதை அலுவலர் டி. மனோகரன்,வேளாண் உதவி அலுவலர்கள் கே. பழநிசாமி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**காரைக்காலில் உளுந்து, பயறு சாகுபடி தொடக்கம்**

**காரைக்கால்,**

காரைக்காலில் நெல் அறுவடைக்குப் பிந்திய உளுந்து, பயறு சாகுபடி சுமார் ஆயிரம் ஏக்கரில் தொடங்கியுள்ளது.

அறுவடைக்குப் பிந்திய சாகுபடி என இதைக் கூறும் விவசாயிகள், மானாவாரி முறையிலும், நேர்த்தியாகவும் சாகுபடியை தொடங்கியுள்ளனர். காரைக்கால் பகுதியில் திருநள்ளாறு, அம்பககரத்தூர், பச்சூர் உள்ளிட்ட சுற்றுவட்டாரத்தில் இவை சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, உளுந்து, பயறு விதைகள் தமிழகத்திலிருந்து வாங்கிவந்தே தெளித்துள்ளோம். உளுந்து 65 முதல் 90 நாள்களுக்குள் அறுவடை செய்யக்கூடியது. பயறு 70 முதல் 90 நாள்களுக்குள் அறுவடை செய்யக்கூடியது.

பரவலாக நிலம் அதிகம் வைத்திருக்கும் விவசாயிகள், குறிப்பிட்ட இடத்தில் உளுந்தும், வேறு இடத்தில் பயறும் சாகுபடி செய்கின்றனர். பயிர் நல்ல முறையில் வளர்ந்து மகசூல் கிடைக்க டானிக் மற்றும் இயற்கை பூச்சி விரட்டிகளுக்கு வேளாண் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தமிழகப் பகுதியில் முறையாக செய்யப்படுகிறது. காரைக்கால் வேளாண் துறையும் அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

உளுந்து, பயறு மகசூல் குறைவதற்கு முக்கிய காரணியாக எலி திகழ்கிறது. விளைநிலத்தில் எலி தொல்லையை கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். முறையாக மற்ற விவசாயிகளும் உளுந்து, பயறு சாகுபடி மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கையை அரசு நிர்வாகம் எடுக்க வேண்டுமென அவர்கள் வலியுறுத்தினர். காரைக்கால் வேளாண் துறை

அதிகாரிகளிடம் இதுகுறித்து கேட்டபோது, பெரும்பாலான அதிகாரிகள் தேர்தல் பணியில் ஈடுபட்டிருப்பதால், இதில் கவனம் செலுத்த முடியவில்லை என்றனர்.

## இயற்கை வேளாண் பயிற்சி நிறைவு

**காரைக்கால்,**

காரைக்காலில் இயற்கை வேளாண்மை குறித்த 2 நாள் பயிற்சி புதன்கிழமை நிறைவடைந்தது.

காரைக்கால் பண்டித ஜவாஹர்லால் நேரு வேளாண் கல்லூரியும், சென்னை நபார்டு வங்கியும் இணைந்து காரைக்கால் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை குறித்த 2 நாள் பயிற்சியை கல்லூரி வளாகத்தில் நடத்தியது.

கல்லூரி முதல்வர் வி.செல்லமுத்து, காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் க. மதியழகன் ஆகியோர் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண் குறித்து விளக்கினர்.

இயற்கை வேளாண்மை முக்கியத்துவம், சிறப்பு, வழிமுறைகள், இதைக் குழுவாக செய்யும்போது கிடைக்கும் நன்மை குறித்து பயிற்சியில் விளக்கப்பட்டது.

இதில் ஒருகட்டமாக பயிற்சியில் பங்கேற்ற காரைக்கால் விவசாயிகள், சீர்காழி பகுதியில் உள்ள அல்லிவிளாகம் என்ற கிராமத்திற்கு சென்றனர்.

பாரம்பரிய நெல் ரகங்கள், மண் புழு உரம், உயிரியல் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு உள்ளிட்டவை குறித்து நேரில் தகவல்களைக் கேட்டறிந்தனர்.

காரைக்கால் விவசாயிகள் தற்போது செய்யும் வேளாண் முறையில் மாற்றம் செய்ய வேண்டுமா, இதன் மூலம் கிடைக்கும் பயன்கள் குறித்து வேளாண் கல்லூரி நிர்வாகத்தினர் விளக்கமளித்தனர்.

கல்லூரி உழவியல் துறை பேராசிரியர்கள் மோகன், சரவணன் ஆகியோர் இப்பயிற்சி முகாமினை நடத்தினர்.

கல்லூரி மாணவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

**வேளாண் விளைபொருள்களுக்கான திறனூட்டும் பயிற்சி**

**கோவில்பட்டி,**

தேசிய முன்பேர சந்தை ஆணையத்தின் உதவியுடன் வேளாண் விளை பொருள்களுக்கான முன்பேர வர்த்தகத்தில் திறனூட்டும் பயிற்சி கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் இரு தினங்கள் நடைபெற்றது.

பயிற்சி தொடக்க விழாவுக்கு வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் ஜவாஹர் தலைமை வகித்து, வேளாண் ஆராய்ச்சி நிலையத்தின் பல்வேறு செயல்பாடுகள் குறித்து விளக்கிப் பேசினார்.

முன்பேர சந்தை ஆணையத்தின் உறுப்பினர் மதிசேகரன், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் இயக்குநர் சின்னத்துரை, என்.சி.டி.எக்ஸ். நிறுவனத்தின் மேலாளர் தேவி செரிமுல்லா ஆகியோர் பேசினர்.

பயிற்சியில், கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் மாணவர்கள் திரளானோர் கலந்து கொண்டனர். ஏங்கல்ஸ் நன்றி கூறினார்.

முன்பேர சந்தை என்பது இணையதளம் மூலமாக விளை பொருள்களை எதிர்கால சந்தையில் விற்பதாகும். இதனை நிகழ்த்துவதற்காக என்.சி.டி.இ.எக்ஸ்., எம்.சி.எக்ஸ். உள்ளிட்ட 6 நிறுவனங்களுக்கு மத்திய அரசு முன்பேர சந்தை ஆணையம் அனுமதி அளித்துள்ளது.

**முந்திரிக்கு மருந்தடிக்கும் பணியில் விவசாயிகள் தீவிரம்**

**பண்ருட்டி,**

பண்ருட்டி பகுதியில் முந்திரி மரங்களுக்கு மருந்தடிக்கும் பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

பண்ருட்டி, கடலூர், விருத்தாசலம் ஆகிய பகுதியில் முந்திரி காடுகள் உள்ளன. தை, மாசி மாதத்தில் பூவெடுக்கும். சித்திரை, வைகாசி மாதத்தில் மகசூல் அறுவடை நடைபெறும். மூன்று வயதில் பூக்கத் தொடங்கினாலும் காய் காய்க்க விடாமல் 5 வருடம் வரையில் பூக்களை அகற்றிவிடுவார்களாம். அதன் பின்னர் அரை

நூற்றாண்டையும் கடந்து மரம் பலன் அளிக்கும். 15, 20 வயதுடைய மரத்தில் இருந்து நல்ல மகசூல் கிடைக்கும் என்கின்றனர் விவசாயிகள். ஆனால் தானே புயலுக்குப் பின்னர் சேதம் அடைந்த மரங்கள் ஒவ்வொன்றாக இறந்து வருவதாக கூறுகின்றனர்.

இந்த முறை மழை பெய்யவில்லை என்றாலும் முந்திரி மரங்கள் பூத்து குலுங்கின்றன. இதில் இருந்து நல்ல மகசூல் கிடைக்கும் என முந்திரி விவசாயிகள் நம்பிக்கை கொண்டுள்ளனர். ஆனால் மழை பெய்யாமல் இருக்க வேண்டும் என கூறுகிறார் கானகுப்பம் விவசாயி மணிவேல்.

பூக்களில் பூச்சித் தாக்குதலை தவிர்க்கவும், பிஞ்சு பிடிக்கவும் மருந்து அடிக்கும் பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். 750 லிட்டரில் கலக்கப்பட்ட பூச்சி மருந்தை தெளிக்க ரூ.500 கூலி வாங்குவதாக கூறுகிறார் வீரசிங்கன்குப்பத்தை சேர்ந்த தொழிலாளி சிவசக்தி.

இயற்கை சீற்றம், தட்ப வெப்பநிலை மாற்றம் போன்றவற்றால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வந்த முந்திரி விவசாயிகள் இந்தமுறை நம்பிக்கை அடைந்துள்ளனர் என்பதில் ஐயமில்லை. ஆனால், இடைப்பட்ட காலத்தில் மழை பெய்யாமல் இருக்க வேண்டும் என்பதே இவர்களின் வேண்டுதல்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

### தமிழகத்தில் ஆங்காங்கே மழை

**சென்னை**: சில தினங்களுக்கு முன், லட்சத்தீவுகள் மற்றும் மாலத்தீவுகள் பகுதியில், கடலின் மேலடுக்கில் உருவான காற்று சுழற்சியின் காரணமாக, இரு தினங்களாக, தமிழகம், புதுச்சேரி, கேரளா, ஆந்திராவின் தெலுங்கானா பகுதிகளில், ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. இன்னும், 24 மணி நேரத்திற்கு, இந்த மழை நீடிக்க வாய்ப்புள்ளதாக, வானிலை ஆய்வு மையம் தெரிவித்தள்ளது. தவிரவும், மார்ச் மாதத்தில், கடந்த ஐந்து நாட்களில், தமிழகத்தில், 61 சதவீதம் அளவிற்கு, இயல்பை

விட, கூடுதல் மழை பதிவாகியுள்ளது. குறிப்பாக, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, தேனி, நெல்லை, தூத்துக்குடி, வேலூர், விருதுநகர் மாவட்டங்களில், இயல்பை விட மழை அதிகரித்துள்ளது.

### முட்டை விலை 330 காசாக சரிவு

**நாமக்கல்**: நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்தது. அதில், முட்டை கொள்முதல் விலையில், 345 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 15 காசு குறைத்து, 330 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 380, பெங்களூரு, 365, மைசூரு, 372, ஹைதராபாத், 342, மும்பை, 382, விஜயவாடா, 345, கோல்கத்தா, 400, பர்வாலா, 320, டில்லி, 350. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### வத்தல்மலையில் பூத்துக்குலுங்கும் காஃபி பூக்கள்: விவசாயிகள் மகிழ்ச்சி

**தர்மபுரி**: தர்மபுரி மாவட்டம், கிராமங்கள் மற்றும் மலைக்கிராமங்களை அதிகம் கொண் ட மாவட்டம். குறிப்பாக தர்மபுரியை அடுத்த வத்தல்மலை கடல் மட்டத்தில் இருந்து, ஆயிரத்தி, 100 மீட்டர் உயரத்தில் உள்ளது. இதனால், வத்தல்மலை மற்றும் அதனை ஒட்டியுள்ள சின்னாங்காடு, ஒன்றிகாடு, பால் சிலம்பு, மண்ணான்குழி, பெரியூர், குழியனூர், நாயக்கனூர், கொட்டலாங்காடு ஆகிய பகுதிகளில், ஆண்டு முழுவதும் குளுமையான சீதோஷ்ண நிலை நிலவி வருகிறது. மேலும் இங்கு நிலவும் சீதோஷ்ண நிலை காரணமாக, மலைப்பயிர்களான காஃபி, மிளகு, கடுகு, ஆரஞ்சு, பலா, சௌசௌ உள்ளிட்ட மலைப்பயிர்களை விவசாயிகள் ஆர்வத்துடன் சாகுபடி செய்து வருகின்றனர். குறிப்பாக வத்தல்மலை, சின்னாங்காடு, பெரியூர் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள், 200 ஏக்கருக்கும் மேல் காப்பி சாகுபடி செய்துள்ளனர். கடந்த சில ஆண்டுகளாக இப்பகுதியில் காஃபி சாகுபடி அதிகளவில் கிடைப்பதால் விவசாயிகள் காஃபி சாகுபடி பரப்பளவை அதிகரித்து வருகின்றனர்.

குறிப்பாக தற்போது வத்தல்மலை உள்ளிட்ட பகுதிகளில் காஃபி பயிருக்கு தேவையான சீதோஷ்ண நிலை நிலவி வருவதால், காஃபி செடிகளில் அதிகளவு

பூக்கள் பூத்துள்ளது. இதனால் அதிக மகசூல் கிடைக்கும் வாய்ப்புள்ளதாக இப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். இது குறித்து சின்னாங்காட்டை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியதாவது: வத்தல்மலை மற்றும் அதனை ஒட்டியுள்ள சின்னாங்காடு உள்ளிட்ட பல்வேறு மலைக் கிராமங்களில் விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளாக ஆர்வத்துடன் காஃபி சாகுபடியில் ஈடுபட்டு வருகிறோம். சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மாவட்ட நிர்வாகம் எங்களுக்கு போதிய உதவிகளை செய்யாமல் புறக்கணித்து வந்ததால், கடுமையாக பாதிக்கப்பட்டு வந்தோம். வத்தல்மலைக்கு சாலை அமைக்கும் பணி நடந்து வரும் நிலையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தோட்டக்கலைத்துறையினர், இப்பகுதிகளில் காஃபி சாகுபடியை அதிகரிக்க, மானியம் மற்றும் நலத்திட்டங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர்.

### விவசாயிகளை அசைத்து பார்க்கும் இலைக்கருகல் நோய்

ஆனைமலை : தென்னை நகரமான பொள்ளாச்சி தாலுகாவில் பெரும்பகுதி தென்னை விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ளனர். தற்போது தென்னையில் கோடை காலத்தில் அதிகம் பரவும் நோயான தென்னை இலைக்கருகல் நோய் இப்பகுதியில் அதிகம் காணப்படுகிறது. தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அடியோடு அசைத்துப்பார்க்கும் இந்த நோயினை கட்டுப்படுத்த வேளாண்துறை ஈடுப்பட்டுள்ளது. பொள்ளாச்சி, ஆனைமலை பகுதிகளிலும், தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலும் சமீப காலமாக அதிக அளவில் தென்னை இலைக்கருகல் நோய் காணப்படுகிறது. தென்னையை தாக்கும் நோய்களில், விவசாயிகளுக்கு மகசூல் குறைப்பை உண்டாக்கி, அதிக பொருளாதார இழப்பை ஏற்படுத்தி வருகிறது .

தென்னையை நோய் தாக்கும் வழிகள்: தென்னையில் பூசக்சிகள், பூஞ்சாணங்கள், களைகள் என மூன்று வழிகளில் நோய்கள் தாக்குகின்றன. இதில் பூஞ்சாணங்கள் மூலம் ஏற்படும் நோய்களினால் தான் மிகப்பெரிய பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. தென்னையை தாக்கும் நோய்களில் முக்கியமானது இலைக்கருகல் நோய். இது லேசியோடிப்லோடியா தியோபுரோமே என்ற பூஞ்சாணம் இந்த நோயினை உண்டாக்குகிறது. இந்த நோயானது நான்கு மாத வயதுடைய கன்றுகளில் இருந்து 70 வயது மரங்கள் வரை இந்த நோய் தாக்குகிறது. நோயின் அறிகுறிகள்: இலைக்கருகல் நோய் முதலில் இலை, இலைமட்டை மற்றும்

காய்களைத் தாக்கும். குறிப்பாக நன்கு முதிர்ந்த அடிமட்டை இலைகளை முதலில் தாக்கி பின்பு அனைத்து மட்டைகளுக்கும் பரவுகிறது. காய்களின் நுனிப்பகுதியில் பழுப்பு நிறப்புள்ளிகள் காணப்படும். நோய் முற்றிய நிலையில் இலை நுனி மற்றும் ஓரங்கள் கருகி கீழ் நோக்கி வளைந்து காணப்படும். நோய் பரவ சாதகமான சூழ்நிலைகள்; இந்த நோய் வருடம் முழுவதும் காணப்பட்டாலும், கோடை காலங்களில் அதிகமாக காணப்படும். அதிக வெப்பநிலை, அதிக ஈரப்பதம் உள்ள காலங்களில் நோயின் தீவிரம் அதிகமாக இருக்கும். நோய் பரவும் விதம்: நோய் தாக்கப்பட்ட மரத்திலிருந்து பூசண வித்துக்கள் காற்றின் மூலம் ஒரு இலை மட்டையிலிருந்து மற்ற இலைமட்டைகளுக்கு எளிதாக பரவுகிறது. இலைக்கருகல் நோயினை கட்டுப்படுத்தும் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள்:

நோய் முற்றிய இலைகளை வெட்டி எரித்து விடுவதால் நோய் பரவுவதை தடுக்கலாம். ெஹக்சகோனசோல் 2 மில்லி லிட்டர் மருந்தை 100 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து மரத்தின் வேர்மூலம் உட்செலுத்த வேண்டும். இந்த மருந்தை மூன்று மாத இடைவெளியில் மூன்று முறை செலுத்த வேண்டும்.

பாதிப்புகள்:இந்நோயினால் தாக்கபட்ட மரங்களின் காய் மகசூல் 10 முதல் 25 சதவீதம் மகசூல் இழப்பு ஏற்படுத்தி விவசாயிகளுக்கு வருவாய் இழப்பை தருகிறது.

## 'தக்காளி சாகுபடிக்கு நுண்ணீர் பாசனம் அமைக்க மானியம்'

**உடுமலை** : 'உடுமலை பகுதியில் தக்காளி சாகுபடி செய்ய, தோட்டக்கலைத்துறை சார்பில், உதவி வழங்கப்படும்,' என, உடுமலை வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் இளங்கோவன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: உடுமலையில் கல்லாபுரம் மற்றும் எலையமுத்துார் பகுதிகளில் தக்காளி சாகுபடிக்கு ஏற்ற சூழ்நிலை உள்ளது. இப்பகுதியில் தக்காளி சாகுபடி செய்ய விரும்பும் பயனாளிகளுக்கு நுண்ணீர்ப் பாசனம் அமைக்க 75 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. 50 சதவீத மானியத்தில், பாலித்தீன் ஷீட் மல்ச்சிங் முறை மூலம் நாற்றுக்களை நட்டு களைத் தாக்குதலை தடுக்கவும் வழி உள்ளது. குறைந்த நீர்த் தேவையில் அதிக மகசூல் பெற லாம். ஒரு பயனாளிக்கு 1.25 ஏக்கர் பரப்புக்கான விதை, உரம், பயிர் பாதுகாப்பு மருந்து இலவசமாக வழங்கும் நிலவள நீர்வளத்

திட்டத்தில், கல்லாபுரம் மற்றும் எலையமுத்துாரில் ஏராளமான விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். அமராவதி பாசன பகுதி சாகுபடியா ளர்கள் சிட்டா, அடங்கல், 3 போட்டோ, ரேஷன் கார்டு, கிராம நிர்வாக அலுவலர் சான்றுடன் தோட்டக்கலைத் துறையை அணுகி, நிலவள நீர்வள திட்டத்தின் மூலம் ரூ.7,500 மதிப்பிலான இடுபொருட்களை இலவசமாக பெற்று பயனடையலாம்.இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ 3.53 கோடிக்கு காய்கறி வர்த்தகம்

**திருப்பூர்** : திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில், கடந்த பிப்., மாதம் ரூ.3.53 கோடிக்கு காய்கறி வர்த்தகம் நடந்துள்ளது. காலை, மாலை என இரு வேளை நடக்கும் திருப்பூர் வடக்கு உழவர் சந்தைக்கு, பெருமாநல்லூர், அவிநாசி, மேற்குப்பதியை சேர்ந்த விவசாயிகள், அனைத்து வகையான காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். கடந்த ஜன., வரை உயர்ந்திருந்த காய்கறி விலை, தற்போது மிகவும் குறைந்துள்ளது. இதனால், சந்தையில் காய்கறி மொத்த வர்த்தகமும் குறைந்து வருகிறது. கடந்த பிப்., மாதம், காலை நேர சந்தைக்கு 4,515 விவசாயிகள், 1,592 டன்; மாலை நேர சந்தைக்கு 478 விவசாயிகள், 169 டன் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்துள்ளனர். காலையில் 3 கோடியே 18 லட்சத்து 95 ஆயிரம்; மாலையில், 34 லட்சத்து 53 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 3 கோடியே 53 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்துள்ளது. இது, ஜன., மாதத்தை விட 25 லட்சம் ரூபாய் குறைவு. 429 விவசாயிகள் ரூ.3.16 லட்சம் மதிப்பிலான காய்கறிகளை குளிர்பதன கிடங்கில் பாதுகாப்பாக வைத்துள்ளனர். விலை குறைந்ததால், கீரை வகைகளை விவசாயிகள் குளிர்பதன கிடங்கில் இருப்பு வைத்து, விற்றுள்ளனர். கடந்த மாதம் ஒரு கட்டு எட்டு ரூபாயாக இருந்த கொத்துமல்லி, தற்போது 3 ரூபாயாக சரிந்துள்ளது.

## காலநிலையில் திடீர் மாற்றம் தேயிலை கவாத்து பணி துரிதம்

**கோத்தகிரி** : கோத்தகிரி பகுதியில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் மழையால், தேயிலை செடிகள் கவாத்து செய்யும் பணி துரிதமாக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில், வழக்கத்திற்கு மாறாக மழை குறைந்தளவே பெய்துள்ளது. இதனால்

தேயிலை தோட்டங்கள் உட்பட விவசாய நிலங்களில் ஈரப்பதம் படிப்படியாக குறைந்து வருகிறது. மேலும், நீர் ஆதாரங்கள் வறண்டு தண்ணீர் தட்டுபாடு பிரச்னை தலைத்தூக்கியுள்ளது. காய்ந்துபோன தேயிலை தோட்டங்களில் மழை பெய்தால்தான் அரும்புகள் துளிர்விடும் என்ற நிலையில், தேயிலை மகசூல் வெகுவாக குறைந்துள்ளது. இந்நிலையில், எதிர்பார்க்காத வகையில், கோத்தகிரி மற்றும் குன்னூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடந்த மூன்று நாட்களாக இரவு நேரங்களில் கனமழை பெய்துவருகிறது. வறண்டு கிடக்கும் விவசாய நிலங்களுக்கு இந்த மழை போதுமானதாக இல்லை, சுட்டெறிக்கும் வெயில் அடிக்கும் மார்ச் மாதத்தில் வழக்கத்திற்கு மாறாக மழை பெய்துள்ளதால் விவசாயிகள் ஆறுதல் அடைந்துள்ளனர். இதற்கிடையில், கோத்தகிரி சுற்றுவட்டாரப் பகுதிகளில், தேயிலை செடிகளை கவாத்து செய்து,தோட்டங்களை பராமரிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுப்பட துவங்கியுள்ளனர்.வானம் தொடர்ந்து மேகமூட்டத்துடன் காணப்படுவதால், மீண்டும் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக கருதி, விவசாயிகள் தங்களது தோட்டங்களுக்கு உரமிடுவதிலும் தீவிரம் காட்டி வருகின்றனர்.

## கால்நடை சிறப்பு மருத்துவ முகாம்

வேலாயுதம்பாளையம்: கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் நொய்யல் கால்நடை மருந்தகம் சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி சிறப்பு முகாம் நடந்தது.

முகாமுக்கு வேட்டமங்கலம் பஞ்சாயத்து தலைவர் சண்முகம் தலைமை வகித்தார். ஒன்றிய கவுன்சிலர் முனுசாமி முன்னிலை வகித்தார். நொய்யல் கால்நடை மருத்துவர் தமிழரசன் வரவேற்றார். கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இயக்குநர் தங்கராஜ் முகாமை துவக்கி வைத்தார். முகாமில், சேமங்கி மற்றும் சுற்று வட்டார பகுதி களை சேர்ந்த, 200க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது.

கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் குழந்தைசாமி, சேமங்கி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத் தலைவர் மாரப்பன், பஞ்சாயத்து துணைத்தலைவர் சுப்பிரமணியன், டாக்டர் தமிழரசன், ஆய்வாளர் நடராஜன், உதவியாளர் மாலதி உட்பட பலர் முகாமில் பங்கேற்றனர்.

**கரூரில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் மார்ச் 21 வரை நடக்கிறது: அதிகாரி தகவல்**

**கரூர்:** "கோமாரி தடுப்பூசி முகாம் வரும், 21ம் தேதி வரை நடக்கிறது' என, கரூர் மண்மங்கலம் பண்டுதகாரன்புதூர் கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் அகிலா தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கோமாரி நோய் மாடு, எருமை, ஆடு, பன்றிகள் ஆகிய கால்நடைகளை தாக்கி மிக அதிகளவிலான பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் கொடிய தொற்று நோயாகும். இந்நோயை கிராமப்புறங்களில் கால்கட்டு, வாய்ச்சப்பை என அழைக்கின்றனர். கோமாரிநோய் பிக்கோர்னா எனப்படும் மிகச்சிறிய வைரஸ் கிரிமியால் ஏற்படுகிறது. அதிவிரைவில் பரவக்கூடிய இந்த கிருமி பிளவுபட்ட குளம்புகள் கொண்ட கால்நடைகள் அனைத்தையும் தாக்கும். நோயுற்ற கால்நடைகளுக்கு கடும் காய்ச்சல் ஏற்பட்டு, வாய், நாக்கு, மடி, காம்பு, குளம்புகளுக்கு இடையே கொப்புளங்கள் புண்கள் காணப்படும்.

இந்நோயுற்ற கால்நடைகளின் உமிழ்நீர், சிறுநீர், பால், சாணம், உபயோகப்படுத்திய தண்ணீர், தீவனத்தொட்டிகள், தீவனம், காற்று மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இந்த வியாதி பரவுகின்றன. இந்நோய் தாக்குதலால் கறவை மாடுகளில் பால் உற்பத்தியும், எருதுகளில் வேலைத்திறனும் குறையும். கறவைமாடுகள் சினைப்பிடிப்பது தடைபடும். இந்நோய் பாதிக்கப்பட்ட மாடுகளின் பாலை குடிப்பதன் மூலம் இளம்கன்றுகள் அதிகளவில் இறப்பு நேரிடும். கடுமையான நோய்க் கிளர்ச்சியினால், 50 விழுக்காடு அளவுக்கு மாடுகள் இறக்க நேரிடும். நோய் பாதிக்கப்பட்டு குணமடைந்த கால்நடைகளின் பால்உற்பத்தி திறன் குறைந்துவிடும். கடந்தாண்டு இந்நோய் தாக்குதலினால் பல மாவட்டங்களில் கால்நடைகள் வெகுவாக பாதிக்கப்பட்டன. தடுப்பூசி மட்டுமே கால்நடைகளை கோமாரி நோயில் இருந்து காப்பாற்றும். எனவே, கால்நடைகளில் அதிக பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் கோமாரி நோயை தடுக்க கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் அனைத்து கிராமங்களிலும் நேற்று முன்தினம் முதல் வரும், 21ம்தேதி வரை கால்நடைகளுக்கு இலவசமாக தடுப்பூசி போடப்படுகிறது. ஆகவே, பண்ணையாளர்கள் அனைவரும் தங்கள் அனைத்து கால்நடைகளையும் தடுப்பூசி அளிக்கும் இடத்திற்கு கொண்டுசென்று, கோமாரி நோய் தடுப்பூசியை

முன்னெச்சரிக்கையாக போட்டு கால்நடைகளை பாதுக்க வேண்டும். இதனால் மாடுகளின் பாலின் அளவு குறைதலோ, அல்லது வேறு சிரமங்களோ, ஏற்படாது. ஒருசிலர் தடுப்பூசி அளிக்காமல் இருப்பதன் காரணமாக, இந்நோய் தாக்கம் ஏற்பட்டு மற்ற கால்நடைகளை பாதிக்கும் வாய்ப்பு இருப்பதால், கால்நடை பராமரிப்புத்துறை நடத்தும் இந்த இலவச தடுப்பூசி முகாமை விவசாய மக்கள் முழுமையான அளவில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

### 15 ஆயிரமாக குறைந்தது பால் உற்பத்தி கால்நடைகளுக்கு தடுப்பூசி தீவிரம்

**மதுரை** : மதுரை மாவட்டத்தில், கோமாரி நோய் பாதிப்பை தடுக்கும் வகையில், முன்னெச்சரிக்கையாக கால்நடைகளுக்கு, மார்ச் 21 வரை தடுப்பூசி போடப்படுகிறது.

கோடையில் இந்நோயின் பாதிப்பு அதிகரிக்கும் என்பதால், மாவட்ட நிர்வாகம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. கலெக்டர் சுப்ரமணியன் உத்தரவின்பேரில், கால்நடைத்துறை, ஆவின் அதிகாரிகள் இலவசமாக தடுப்பூசி போட்டு வருகின்றனர். இப்பணி மார்ச் 21 வரை நடக்கிறது. கோடையில், பால் உற்பத்தி குறைவாகவே இருக்கும். வழக்கமாக தினமும் 1.85 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யும், மதுரை ஆவினுக்கு, சில மாதங்களாக 2 ஆயிரம் லிட்டர் குறைந்தது. தற்போது பால் 15 ஆயிரம் லிட்டர் வரை குறைந்தது. கோமாரி நோய் பாதித்தால், மாடுகள் தீவனம் உட்கொள்வது குறைந்துவிடும். இதனால் பால் உற்பத்தித் திறனும் வெகுவாக குறைந்துவிடும். எனவே, ஆவின் நிர்வாகம் மதுரை, தேனி மாவட்டங்களில், தடுப்பூசி பணியை தீவிரப்படுத்தியுள்ளது. ஒருமுறை தடுப்பூசி போட்டுக் கொள்வதன் மூலம் ஆறுமாதங்களுக்கு மாடுகளுக்கு பாதுகாப்பு கிடைக்கும். ஆடுகளும் இந்த தடுப்பூசியை போட்டுக் கொள்ள வேண்டும். ஆனால், விவசாயிகளிடையே இந்த விழிப்புணர்வு இல்லை. ஆடு, மாடுகளிடையே இந்நோய் பரவும் என்பதால், 6 மாதத்திற்கு மேற்பட்ட அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி அவசியம், என கால்நடைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**தடியன்குடிசையில் 96 மி.மீ., மழை :கொட்டித் தீர்த்தது**

தாண்டிக்குடி : தடியன்குடிசை நறுமண சுற்றுலா மைய பகுதியி கோடை மழை வெளுத்து வாங்கியதில் ஒரே நாளில் 96 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. பருவ மழையின்றி வறட்சி மற்றும் பனியின் தாக்கம் என மாறி, மாறி சீதோஷ்ண நிலை அவ்வப்போது மாற்றமடைந்து வந்தது.

இந்நிலையில் கடந்த ஒரு வாரமாக வெயிலின் தாக்கம் குறைந்து மேகமூட்டத்துடன் சாரல் மற்றும் மிதமான மழை ஆங்காங்கே பெய்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு 8 மணி முதல் தாண்டிக்குடி, பண்ணைக்காடு, பூலத்தூர், தடியன்குடிசை, புல்லாவெளி மற்றும் கீழ்மலை பகுதியில் பரவலாக கனமழை பெய்தது. இரவு நேரத்தில் திடீரென பெய்த கன மழையால் ரோட்டில் மழைநீர் ஆறாக ஓடியது. இதில் அதிகபட்சமாக தடியன்கு டிசை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் 96 மி.மீ., தாண்டிக்குடியில் 29 மி.மீ., மழையும் பதிவாகியது. தற்போதைய மழை சிறு குறு விவசாயங்களுக்கும், வாழை, ஆரஞ்சு, மிளகு உள்ளிட்டவற்றிற்கு ஏற்றதாகவும், காபி விவசாயத்திற்கு பின்னடைவை ஏற்படுத்தும் வகையிலும் உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விளைச்சல் அதிகரித்த காரணத்தால் தக்காளி விலை பெரிதும் வீழ்ச்சி**



தருமபுரி மாவட்டத்திலுள்ள பாலகோடு, புலிக்கரை, அதகப்பாடி, பஞ்சப்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் விளைச்சல் அதிகரித்த காரணத்தால் தக்காளி விலை பெரிதும்

வீழ்ச்சி அடைந்துள்ளதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். சில நாட்கள் முன்னதாக கிலோ ரூ.40க்கும் மேல் விற்பனை செய்யப்பட்ட தக்காளி தற்போது ரூ.1 வரை விலை சரிந்துள்ளதாக அவர் கூறியுள்ளனர். போதிய விலை கிடைக்காத காரணத்தால் தோட்டத்திலேயே வீணாகி வரும் தக்காளிகளை வேறு வலியின்றி கால்நடைகளுக்கு தீவினமாக வழங்கப்படுவதாக விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர்.

**முட்டை விலை சரிவு**



**நாமக்கல்**: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 15 காசுகள் சரிந்து, ஒரு முட்டையின் விலை 330 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், 'தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின்' விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடந்தது. பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டு முட்டை விற்பனை நிலவரம் பற்றி ஆலோசித்தனர். கூட்டத்தில் முட்டை விலையில் 15 காசு குறைக்க முடிவு செய்யப்பட்டது. அதை தொடர்ந்து ஒரு முட்டையின் விலை 330 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. கோடைகாலம் துவங்கியுள்ளதால், தமிழகம் முழுவதும் கடுமையான வெப்பம் நிலவுகிறது. இதனால் தமிழகத்தில் முட்டை விற்பனை குறைந்து, அதன் காரணமாக விலையும் குறைக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ முட்டைக்கோழி ஸி48 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ஸி63 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம்: (பைசாவில்) பெங்களூரு- 365, மைசூர்- 372, ஐதராபாத்- 342, மும்பை- 382, விஜயவாடா- 345, கொல்கத்தா- 400, டெல்லி- 350 காசுகள்.

**முருங்கை காய் விளைச்சல் அதிகரிப்பு**

**காட்டுமன்னார்கோவில்,** : கோடை காலங்களில் வீட்டின் தோட்டங்களில் தர்பூசணி, முருங்கை, வெண்டை, கத்தரி என பல்வேறு சாகுபடிகள் செய்யப்படுகிறது. கிராமங்களில் வீடுகள் தோறும் முருங்கை மரங்கள் வளர்க்கப்படுவது வழக்கம். வியாபார நோக்கில் முருங்கை சாகுபடி செய்யப்பட்டாலும் வீடுகளில் முருங்கை வளர்ப்பு இந்த பகுதியில் அதிக அளவு காணப்படுகிறது. அனைத்து வீடுகளிலும் வீட்டிற்கு ஒரு முருங்கை மரம் இருந்து வருகிறது.

காய்கறிகளின் விலை ஏற்றத்தின் போது கிராமபுற மக்களுக்கு எளிதில் கை கொடுப்பதாக இருப்பது முருங்கை மரங்களே. இதனால் முருங்கை மரத்திற்கு தனி முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இந்த ஆண்டு சீரான மழை அளவு, கடுமையான பனியும் பெய்ததால் முருங்கை மரங்களில் நன்றாக பூக்கள் பூத்தது. இதன் காரணமாக காய்கள் அதிக அளவு காய்க்க தொடங்கி உள்ளது. இந்த பகுதியில் வியாபார நோக்கில் பயிரிடப்பட்ட பரப்பிலும் முருங்கை காய்கள் அதிக எண்ணிக்கையில் காய்த்துள்ளன. வீடுகளில் வளர்க்கப்படும் மரங்களிலும் காய்கள் அதிக அளவு உள்ளது. இதன் காரணமாக முருங்கை காய்கள் இந்த ஆண்டு விலை குறைவாக இருக்கும் என கூறப்படுகிறது.

**கள்ளக்குறிச்சி வாரச்சந்தையில் ரூ2.5 கோடி பருத்தி விற்பனை**

**கள்ளக்குறிச்சி,** : கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்றுமுன்தினம் பருத்தி வாரச்சந்தை நடந்தது. கள்ளக்குறிச்சி, சின்னசேலம், ரிஷிவந்தியம், திட்டக்குடி, பெரம்பலூர், கடலூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 1024 விவசாயிகள், 13 ஆயிரம் பருத்தி மூட்டைகள் கொண்டு வந்தனர். இவற்றை சேலம், ஈரோடு, கோவை, கோவில்பட்டி, மகுடஞ்சாவடி, விழுப்புரம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் ஏலம் மூலம் கொள்முதல் செய்தனர். இதில் எல்ஆர்ஏ பருத்தி ஒரு குவிண்டாலுக்கு குறைந்த பட்சம் ரூ.4ஆயிரத்து 715 லிருந்து, அதிக பட்சமாக ரூ. 5 ஆயிரத்து 089க்கு விற்பனையானது. சுவின் பருத்தி குறைந்தபட்சம் ரூ. 6 ஆயிரத்து

230லிருந்து, அதிகபட்சமாக ரூ. 6 ஆயிரத்து 230க்கு விற்பனை செய்யப்பட்டது. நேற்று முன்தினம் மட்டும் ரூ.2.5 கோடிக்கு பருத்தி விற்பனை செய்யப்பட்டது.

**செம்பியன்மாதேவி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை**

**உளுந்தூர்பேட்டை,** : உளுந்தூர்பேட்டை அருகே உள்ளது செம்பியன்மாதேவி கிராமத்தில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். இதனை சுற்றியுள்ள கிராம பொதுமக்களின் சுய வேலைவாய்ப்பினை உருவாக்கும் பொருட்டு கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் சேலம் நெடுஞ்சாலை ஓரம் கோழிப்பண்ணை அமைக்கப்பட்டது. 6க்கும் மேற்பட்ட கட்டிடங்களை கொண்டு அமைக்கப்பட்ட இந்த கோழிப்பண்ணை சில பிரச்னை காரணமாக மூடப்பட்டது. இதனால் கோழிப்பண்ணைக்காக அமைக்கப்பட்ட கட்டிடங்கள் அனைத்தும் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக பாழடைந்த நிலையில் பயனற்ற நிலையில் உள்ளது. இந்நிலையில் செம்பியன்மாதேவி கிராமத்தில் அதிக அளவு விவசாய பணிகளுக்காகவும், பால் விற்பனைக்காகவும் மாடுகளை வளர்த்து வருகின்றனர். இந்த கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களுக்கு சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள எலவனாசூர்கோட்டை கால் நடை மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் நலன்கருதி பாழடைந்த நிலையில் உள்ள இந்த கோழிப்பண்ணை இடத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும் என தற்போது செம்பியன்மாதேவி கிராம மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். கோழிப்பண்ணை உள்ள இடத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கப்பட்டால் இக்கிராமம் மட்டுமின்றி அருகில் உள்ள கிராமங்களை சேர்ந்த விவசாயிகளுக்கும் பயன் உள்ள தாக அமையும் என்பதால் விரைந்து நடவடிக்கை எடுத்து வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

**நடப்பாண்டில் மஞ்சள் விலை உயர வாய்ப்பு 25 ஆண்டு கால விலை ஆய்வில் தகவல்**

**சேலம்,**: நடப்பாண்டில் மஞ்சள் விலை உயரும் என வேளாண் துறையால் நடத்தப்பட்ட ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இந்தியாவில் ஒரு ஆண்டுக்கு 75

லட்சம் மூட்டை மஞ்சள் தேவைப்படுகிறது. மஞ்சள் ஜூன், ஜூலையில் பயிரிடப்பட்டு மார்ச், ஏப்ரலில் அறுவடை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு மஞ்சள் விலை ஏற்ற, இறக்கத்துடன் இருந்தது. கடந்த வருடம் ஏப்ரலில் ஒரு குவிண்டால் மஞ்சள் ரூ.6500 முதல் 7500 வரையும், ஆண்டு மத்தியில் ரூ.5800க்கும், வருட இறுதியில் சற்று விலை உயர்ந்தும் விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு துவக்கத்தில் இருந்தே மஞ்சள் விலை ஏறுமுகத்தில் உள்ளது. தற்போது குவிண்டால் ரூ.6700 வரை விற்பனையாகிறது. இந்நிலையில் எதிர்காலத்தில் மஞ்சள் விலையை அறிந்து கொள்ள விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். இதையடுத்து தேசிய வேளாண் புதுமை திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி தகவல் மையமானது, ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த 25 ஆண்டுகளாக நிலவிய மஞ்சள் விலையை ஆய்வு செய்தது. மேலும் வர்த்தகர்களிடமும் ஆய்வு நடத்தியது. இதன்படி நடப்பாண்டில் இந்திய மஞ்சள் உற்பத்தி மூட்டைக்கு 75 கிலோ வீதம் 35 முதல் 40 லட்சம் மூட்டைகளாக இருக்குமென தெரியவந்துள்ளது. மஞ்சளின் தேவை குளிர்காலம் முடியும் சமயமான பிப்ரவரி மாத இறுதியில் அதிகரிக்கும். எதிர்வரும் மாதங்களில் எதிர்பார்க்கப்படும் மஞ்சளின் தேவை மற்றும் முக்கிய உற்பத்தி மையங்களில் உள்ள குறைந்த இருப்பு ஆகிய காரணங்கள் மஞ்சள் விலையை உயர்த்தும். ஆய்வு முடிவு கள், நடப்பாண்டு மார்ச் முதல் மே வரை மஞ்சள் குவிண்டால் ரூ.7500 தாண்டி விற்பனையாகும் என தெரிவிப்பதாக வேளாண் துணை இயக்குனர் (வணிகம்) பரணி கூறினார்.

**இடநெருக்கடியால் பருத்தி ஏலம் ரத்து**

**நாமக்கல்**,:நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரம் தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெறும். கடந்த

வாரம் சங்கத்துக்கு 2 ஆயிரத்துக்கும் அதிகமான பருத்தி மூட்டைகள் ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. ஏலத்தில் பருத்தி மூட்டையை எடுத்த வியாபாரிகள் பலர் சங்கத்தில் பணம் செலுத்தாததால் பருத்தி மூட்டைகள் அவர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை.

இதனால் கடந்த வாரம் வந்த பருத்தி மூட்டைகள் சங்க வளாகத்தில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. இடநெருக்கடி காரணமாக நேற்று பருத்தி ஏலம் நடைபெறவில்லை.

அடுத்த வாரம் பருத்தி ஏலம் தொடர்ந்து நடைபெறும் என சங்கத்தில் விவசாயிகளுக்கு தெரியும் வகையில் அறிவிப்பு வைக்கப்பட்டிருந்தது.

**பாரம்பரிய தாவர ரகங்கள் பாதுகாப்பு கருத்தரங்கம்**

**நாமக்கல்**, :நாமக்கல்லில் தாவர ரகங்கள் பாதுகாப்பு, உழவர்களின் உரிமை சட்டம் குறித்த கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி நேற்று நடந்தது. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், தாவர ரகங்கள் பாதுகாப்பு மற்றும் உழவர்களின் உரிமைகள் ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் கீதா ராணி, சர்மிளா பாரதி, ஸ்ரீராம், இஸ்ரேல் ஆலிவர் கிங், தமிழ்செல்வி, சவுந்திரராஜன் ஆகியோர் கருத்தரங்கின் நோக்கம் குறித்தும், தாவர ரகங்களை பதிவதன் முக்கியத்துவம் குறித்தும் பேசினர்.

நிகழ்ச்சியில் சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் கொல்லிமலையில் உள்ள திருப்புளி நாடு, ஆலந்தூர் நாடு, குண்டனி நாடு, குண்டூர் நாடு, வளப்பூர் நாடு, தேவனூர் நாடு, சேலூர் நாடு, அரியூர் நாடு, எடப்புளி நாடு, பைல் நாடு, பெரக்கரை நாடு, சித்தூர் நாடு உள்ளிட்ட பகுதிகளிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு அவர்கள் பயிர் செய்துள்ள பாரம்பரிய விதைகள் மற்றும் தாவர ரகங்களை கண்காட்சியில் வைத்திருந்தனர்.

விவசாயிகளுக்கு சிறப்பு பரிசு மற்றும் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன.

**தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க சொட்டுநீர் பாசனத்தை கடைபிடிக்க வேண்டும் உழவர் தின விழாவில் வேண்டுகோள்**

**தர்மபுரி**, :பாப்பாரப்பட்டியில் உழவர் பயிற்சி நிலையம் சார்பில் உழவர் தின விழா நடந்தது. இதில் தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க விவசாயிகள், சொட்டுநீர் பாசன விவசாயத்தை கடைபிடிக்க வேண்டும் என அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

தர்மபுரி மாவட்ட உழவர் பயிற்சி நிலையம் சார்பில், உழவர் தின விழா பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடந்தது. விழாவில், வேளாண் துணை இயக்குனர் பாஸ்கர் வரவேற்றார். இணை இயக்குனர் மோகன் தலைமை வகித்து பேசுகையில், வேளாண்மையில் நவீன தொழில்நுட்பங்களை கடைபிடித்து உயர் விளைச்சல் பெற வேண்டும். விவசாயிகள் ஒருங்கிணைந்த பண்ணை முறையை பின்பற்றுவதன் மூலம் தண்ணீர் பற்றாக்குறை சூழலிலும் வருமானம் ஈட்டலாம் என்றார்.

வேளாண் துணை இயக்குனர் வேணுகோபால் பேசும்போது, தற்போது நிலவி வரும் தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க, விவசாயிகள் அனைவரும் சொட்டு நீர் பாசன முறையில் சாகுபடி செய்ய வேண்டும். சொட்டுநீர் உரப்பாசனம் மூலம் குறைந்த அளவு பாசன நீரை கொண்டு அதிக பரப்பளவில் சாகுபடி செய்து அதிக மகசூல் பெறலாம் என்றார்.

விழாவில் பேராசிரியர் தமிழ்செல்வன், துல்லிய பண்ணையத்தில் அதிக மகசூல் பெறுவது பற்றியும், கால்நடை மற்றும் பயிற்சி நிலையத்தின் தலைவர் மீனலோசனி லாபகரமான முறையில் கறவை மாடு வளர்ப்பு குறித்தும், தோட்டக்கலை உதவி இயக்குனர் முகுந்தன் தோட்டக்கலை துறையில் அளிக்கப்படும் மானியங்கள், தோட்டப்பயிர்களுக்கான உயர் தொழில்நுட்பம் பற்றியும், உதவி பொறியாளர் அறிவழகன், நவீன வேளாண்மையில்

இயந்திரங்களை பயன்படுத்துவதன் அவசியத்தையும், மண்ணியல் துறை விஞ்ஞானி சங்கீதா மண் ஈர பாதுகாப்பு தொழில்நுட்பம் குறித்தும் விளக்கி பேசினர்.

மேலும், சில்பாலின் முறையில் மண்புழு வளர்த்தல் போன்ற செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. வேளாண் அலுவலர் புவனேஸ்வரி நன்றி கூறினார். இதில் 200 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### கம்பைநல்லூர் பகுதியில் வெண்டை விளைச்சல் அமோகம்

**அரூர்**, :தர்மபுரி மாவட்டம் மொரப்பூர், கம்பைநல்லூர், நல்லம்பட்டி பகுதிகளில் வெண்டை விளைச்சல் அமோகமாக உள்ளது. இரண்டு மாத பயிரான வெண்டை நன்றாக பாசன வசதி இருந்தால், 45 நாட்களில் விளைச்சல் தர தொடங்கும். தொடர்ந்து இரண்டு மாதம் வரை ஒரு நாள்விட்டு ஒரு நாள் அறுவடை செய்தால் நாளொன்றுக்கு 120 முதல் 150 கிலோ வரை விளைச்சல் தரும். தர்மபுரி மாவட்டத்தில் கம்பைநல்லூர், மொரப்பூர், தர்மபுரி ஆகிய இடங்களில் மொத்த வியாபாரிகள் மண்டிகள் வைத்து கொள்முதல் செய்து தமிழகம் மட்டுமின்றி கர்நாடகாவிற்கும் விற்பனைக்கு அனுப்புகின்றனர். நாள்தோறும் சுமார் 12 டன் வெண்டை வெளி மாவட்டங்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது.வெண்டை பயிரிட ஏக்கருக்கு ரூ10 ஆயிரம் முதல் 12 ஆயிரம் வரை செலவாகிறது. தற்சமயம் கிலோ ரூ 14 முதல் 15 வரை மொத்தமாக கொள்முதல் செய்யப்படுகிறது. ஒரு ஏக்கரில் 3 முதல் 4 டன் வெண்டை அறுவடை செய்ய முடியும் .இதனால் லாபம் அதிகம் கிடைக்கிறது என விவசாயிகள் அதிக அளவில் வெண்டை பயிரிட்டுள்ளனர். இது குறித்து கம்பைநல்லூர் வியாபாரி காசிநாதன் கூறுகையில், மொத்த விலையில் கடந்த வாரத்தில் கிலோ ரூ23 முதல் வாங்கி வந்தோம். தற்போது வரத்து அதிகரித்துள்ளதால் கிலோ ரூ14 முதல் 15க்கு கொள்முதல் செய்து கேரளா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது என்றார்.

**திட்ட அறிக்கை வெளியீடு ரூ.7110 கோடி கடன் வழங்க இலக்கு அதிகாரி தகவல்**

**திருப்பூர்,** : மாவட்டத்தில் ரூ.7,110 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கணேசன் தெரிவித்தார்.

மாவட்டத்தில் உள்ள அனைத்து வங்கிகளின் ஒருங்கிணைப்புடன் கலெக்டர் தலைமையில் ரிசர்வ் மற்றும் நபார்டு வங்கி மேற்பார்வையில் மாவட்டத்திற்கான வளர்ச்சி திட்டங்கள் வரையறுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இதன்படி 2013-14ம் ஆண்டின் திட்ட அறிக்கை வெளியீடு நிகழ்ச்சி கலெக்டர் கோவிந்தராஜ் தலைமையில் நடந்தது. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மண்டல மேலாளர் நரசிம்மன், நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் ஸ்ரீராம் உள்பட வங்கி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.விவசாயம் மற்றும் அதன் சார்ந்த தொழிலுக்கு கடனாக ரூ.2ஆயிரத்து 150 கோடியே 37 லட்சத்துக்கும், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் கடனாக ரூ.4ஆயிரத்து 239 கோடியே 64 லட்சத்துக்கும், கல்வி, வீட்டுக்கடன் உள்ளிட்ட இதர முன்னுரிமை கடனாக ரூ.720கோடியே 17 லட்சத்துக்கும் என ரூ.7 ஆயிரத்து 110 கோடியே 18 லட்சத்துக்கு கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டை விட நடப்பாண்டு 15.05 சதவீதம் அதிகமாக கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் வரும் ஆண்டுகளில் நிர்ணயிக்கப்பட்ட கடன் இலக்கை அடைய முடியும் என மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கணேசன் தெரிவித்தார்.

**கிணற்றுப்பாசனம் மூலம் மிளகாய் சாகுபடி**

**கரூர்,** : கரூர் பகுதியில் மழை இல்லாததால் கிணற்றுப் பாசனம் மூலம் மிளகாய் சாகுபடி நடைபெற்று வருகிறது.

கரூர் அருகே உள்ள பெரியதாதம்பாளையம், ஏமூர், முத்துலாடம்பட்டி, கணபதிபாளையம் போன்ற பகுதிகளில் பரவலாக மிளகாய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கிணற்றுப் பாசனம் மூலம் ஊடு பயிராக சில இடங்களில் ஆமணக்கு பயிரிடப்பட்டு இருக்கிறது. இப்பகுதியில் சுமார் 10ஏக்கரில் மிளகாய் பயிரிடப்பட்டிருக்கிறது. வழக்கமாக புரட்டாசியில் பயிரிட்டு மாசி மாதத்தில் அறுவடை செய்கின்றனர்.கரூர் மாவட்டத்தில் நீர் இருப்பை பொறுத்து

விவசாயிகள் பரவலாக பச்சை மிளகாய் பயிர் செய்கின்றனர். விதைத்ததில் இருந்து 75நாட்களில் பச்சை மிளகாய்களை பறிக்கலாம். பொதுவாக பச்சை மிளகாய் என்றால் எக்டே ருக்கு 10முதல் 15டன் வரை கிடைக்கும். வத்தல் மிளகா ய் என்றால் எக்டேருக்கு 2முதல் 3டன் வரை மகசூல் பெறலாம் என தோட்டக்கலைத் துறையினர் தெரிவித்தனர். தற்போது இலைசுருட்டு நோய் காரணமாக மிளகாய் செடிகள் பாதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து விவசாயி ராமசாமி கூறுகையில், கடந்த மாதம் தான் புழுவெ ட்டு கட்டுப்படுத்துவதற்காக மருந்து தெளிக்க வேண்டியதிருக்கிறது.

தோட்டக்கலைத்துறை சார்பில் அடிக்கடி ஆலோசனை மற்றும் மானியம் வழங்க வேண்டும். மிளகாய் விதை மட்டும் ஒரு கிலோ ரூ.600 க்கு வெளிமார்க்கெட்டில் வாங்கி விதைக்கிறோம். அறுவடை செய்யும் வரை யில் பல்வேறு செலவுகளை செய்து பயிரைக்காப்பாற்ற வேண்டி இருக்கிறது. நல்ல மகசூல் இருந்தால் 50செ ன்ட் இட த்தில் 20மூட்டை விளைச்சல் பெறலாம். ஒரு மூட்டை 100கிலோ வீதம் 2ஆயிரம் கிலோ மிளகாய் எடுக்கலாம். முன்பு மார்க்கெட் விலை கிலோ ரூ.50வரை போகும். தற்போது நல்ல விளைச்சல் இருக்கிறது. ஆ னால் கொள் முதல் விலை குறைந்துவிட்ட து. தற்போது விலை குறைந்துவிட் டது. மின்வெ ட்டு பிர ச்னை இல்லாததால் கிணற் றுப் பாசனம் மூலம் வி¬ ளச்சல் எ டுக்க முடிகிறது. முன்பெல்லாம் மிள காய், தக்காளி செடி பயிரிட்டால் விளைச்சல் குறிப்பிட்ட காலத்தில் இருக்கும். ஆனால் தற்போது சீதோ ஷ்ண நிலை வேறு மாறுபடுகிறது. மழைக்காலத்தில் மழை பெய்வதில்லை போ ன்ற பிரச்னை களை சமாளி த்து மகசூல் எடுக்கிறோம். ஆனால் தற்போது தக்காளி விலையும் சரிந்துவிட்டதால் எதிர்பார்த்த லாபம் இல்லை என்றார்.

### கரூர் அரசு கலைக் கல்லூரியில் கால்நடை வளர்ப்பு பயிற்சி முகாம்

**கரூர்,** : கரூர் அரசு கலைக் கல்லூரியில் பொருளியல் துறை சார்பாக கால்நடை வளர்ப்பு தொழிற்பயிற்சி என்ற ஒரு நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது. கல்லூரி ஆடிட்டோரியத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு பொருளியல் துறை தலைவர் இந்துமதி வரவேற்றார். கல்லூரி முதல்வர் கலா தலைமை வகித்தார். இதில், தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் பல்கலைக்கழக பேராசிரியர்

அகிலா, உதவி பேராசிரியர் விஜயகுமார், புனிதர்கள் உலக மனித கல்வி மற்றும் வளப்படுத்துதல் அறக்கட்டளை தலைவர் கவிதா உள்பட பலர் கலந்து கொண்டு பேசினர்.

பேராசிரியர் சுரேஷ் நன்றி கூறினார். ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## நவீன தொழில்நுட்பத்தில் அதிக மகசூல் பெறுவது எப்படி? விவசாயிகளுக்கு பயிற்சி

**அரவக்குறிச்சி**, : அரவக்குறிச்சியில் நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை சார்பில் உயர் தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது.

அரவக்குறிச்சி ஒன்றியத்தில் அமராவதி ஆயக் கட்டு பகுதிகளான ஈசநத் தம், சேந்தமங்கலம், நாகம்பள்ளி ஆகிய பகுதிகளில் தனித்தனியாக நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை சார்பில் உயர் தொழில்நுட்பம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் நவீன தொழில்நுட்பத்தில் பயிரிட்டு விவசாயிகள் கூடுதல் மகசூல் பெறுவது பற்றி தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் வளர்மதி பயிற்சி அளித்து பேசினார்.

ஈசநத்தம் பகுதிகளில் பீர்க்கை, புடலங்காய் உள் ளிட்ட பந்தல் காய்கறிகள் பயிர் செய்யும் விவசாயிகள் தோட்டங்களை நாம் விவசாயிகள் விழிப்புணர்வு சங்க மாவட்ட செயலாளர் செல்வராஜ் தலைமையில் குழு பர்வையிட்டு பயனடைந்தனர். சேந்தமங்கலம் பகுதி விவசாயிகளுக்கான பயிற்சி அரவக்குறிச்சி ஊரா ட்சி ஒன்றிய கூட்ட மன்றத்தில் மாவட்ட கவுன்சிலர் குருசாமி முன்னிலையில் நடைபெற்றது.

இதில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொ ண்டனர். நாகம்பள்ளி பகுதியில் நடைபெற்ற பயி ற்சி முகாமிற்கு ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் தமிழ்மணி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தலைவர் தேவராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் 60க் கும் மேற்பட்ட விவசாயிக ள் கலந்து கொண்டு விவ சாய உயர் தொழில்நுட்ப பயிற்சி மற்றும் சோலாரில் (சூரிய சக்தியில்) இயங்கும் தண்ணீர் இறைக்கும் பம்ப் செட் குறித்து தெரிந்து கொண்டு பயனடைந்தனர்.

இந்த பயிற்சி முகாம் களை தோட்டக்கலை உதவி அலுவலர்கள் பன்னீர் செல்வம், ராதாகிருஷ்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.

**ஆலங்குடி அருகே வம்பன் வேளாண் நிலையம் சார்பில் நேரடி நெல் விதைப்பு செயல்விளக்கம்பயிர் நோய்களை கட்டுப்படுத்த ஆலோசனை**

**ஆலங்குடி,** : ஆலங்குடியை அருகேயுள்ள வடகாட்டில் வம்பன் அறிவியல் நிலையம் சார்பில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சேற்று வயலில் நேரடி நெல் விதைப்பு ஒரு நாள் செயல் விளக்க பயிற்சி நடந்தது. வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் அசோகன் பயிற்சியை துவக்கி வைத்தார். வடகாடு ஆத்மா குழு உறுப்பினர் மனோன்மணி வரவேற்றார். இந்நிகழ்ச்சியில் விதை அறிவியல் துறை உதவிப் பேராசிரியர் கதிரவன் பேசுகையில் நேரடி நெல் விதைப்பு கருவி கொண்டு விதைக்கும் போது, ஒரு ஏக்கருக்கு 16 கிலோ விதை போதுமானது. இதில் வரிசைக்கு வரிசை 25 செ.மீ இடைவெளியும், செடிக்கு செடி 7 செ.மீ இடைவெளியும் கிடைக் கும். இந்த இடைவெளியில் உருளை கருவி கொண்டு நெல் வரிசைகளுக்கு இடையே இழுப்பதால், வேருக்கு தேவையான ஆக்ஸிஜன் கிடைக்கும், தேவையற்ற அங்கக அமிலங்கள் வெளியேறவும் வாய்ப்பு அதிகம். பயிரின் வேர் புத்துயிர் பெற்று பயிர் மேலோங்கி வளரும், அத்துடன் நல்ல விளைச்சல் தரும். வறட்சி காலத்தில் ஒரு சதம் பொட்டா'; கரைசலை இலை வழியாக தெளித்து இலை வழி நீர் ஆவியாவதை கட்டுப்படுத்தாலம் என்றார். இந்த கருவின் விலை ரூபாய் 4700 மட்டுமே ஒரு நாளைக்கு 2.5 ஏக்கரில் விதைக்கலாம், 3 ஆட்கள் போதுமானது என்றார். பூச்சியல் துறை உதவிப் பேராசிரியர் சாமிநாதன் பேசுகையில்; இலை சுருட்டுப்புழு தாக்குதலை அந்து பூச்சி வயல்களில் பறப்பதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். பொருளாதார சேத நிலைமை தாண்டும் போது கீழ்கண்ட பூச்சி மருந்துகளில் ஏதேனும் ஒன்றினை ஏக்கருக்கு தெளிக்கலாம். டிரைஅசோபாஸ் 40 இசி 250மி.லி பிப்ரோனில் 5 சதம் எஸ்.வி 500மிலி மேனோகுரோட்டபாஸ் 36எஸ்.எல் 500 மிலி மருந்து தெளிக்க வேண்டும்.

குருத்து பூச்சிகளின் புழுக்களை கட்டுப்படுத்த விளக்கு பொறி வைத்து தாய் அந்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். ட்ரைகோ கிராம்மா ஜப்பாணிக்கம் முட்டை

ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2 மிலி அளவில் நடவு செய்த 15 நாட்கள் முதல் வாரம் ஒரு முறை 4 வாரத்திற்கு கட்டி முட்டைகளை அழிக்கலாம் என்றார். பயிர் நோயியல் துறை உதவி பேராசிரியர் மதியழகன் கூறுகையில். பாக்டீரியா இலைக்கருகல் நோயைக் கட்டுப்படுத்த நோயற்ற விதைகளை தேர்வு செய்ய வேண்டும். பரிந்துரை அளவு மட்டும் தழைச்சத்து இடவேண்டும். நோயின் தாக்குதல் தீவிரமாகும் போது ஏக்கருக்கு ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட் மற்றும் டெட்ராமைசின் கலவை 120 கிராம் மற்றும் காப்பர் ஆக்ஸிகுளோரைடு 500 கிராம் கலந்து தெளிக்க வேண்டும்.

குலை நோயைக்கட்டுப்படுத்த ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் ப்ளோரன்ஸ் எதிர் உயிரி பூஞ்சான கொல்லியை கலந்து நேர்த்தி செய்து விட வேண்டும். நடவுக்கு முன் நாற்றுகளை சூடோ மோனாஸ் கரைசலில் 30 நிமிடம் ஊறவைத்து நடவு செய்து குலை நோயைக் கட்டுப்படுத்தலாம். தோட்டக்கலை உதவிப் பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட வேளாண் அதிகாரிகள் முகாமில் கலந்து கொண்டனர்.

**பாசன நீர் பரிசோதனை அவசியம் தொழிற்பயிற்சி முகாமில் தகவல்**

**பூம்புகார்**, : நாகை மாவட்டம் பூம்புகார் எம்.எஸ்.சுவாமி நாதன் மீன் ஆராய்ச்சி நிறுவனமும் மயிலாடுதுறை இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கியின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையமும் இணைந்து 15 நாட்கள் நடத்தும் விவசாயம் சார்ந்த தொழிற்பயிற்சியின் துவக்க விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. 21வது ஒருங்கிணைந்த விவசாய பண்ணை சார்ந்த முதல்நாள் பயிற்சிக்கு எம்.எஸ்.சுவாமி நாதன் ஆராய்ச்சி நிறுவன மையத்தலைவர் கிருஷ்ணன் தலைமை வகித்தார். மயிலாடுதுறை இந்தியன் ஒவர்ஸீஸ் வங்கியின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மைய இயக்குனர் பரமசிவன் முன்னிலை வகித்தார். ஆராய்ச்சி மைய முதுநிலை ஆராய்ச்சியாளர் செல்வராசு வரவேற்றார்.

பயிற்சியில், விளைநிலத்தில் விளைச்சல் எவ்வளவு முக்கியமோ அதைவிட ஆதாரமாக விளங்கும் மண்வளம் மிகவும் முக்கியம். மண்ணின் வளத்தை பொறுத்தே நாம் பயிரிடும் பயிரினை தேர்வு செய்ய வேண்டும். மண் பரிசோதனை மற்றும் பாசனநீர் பரிசோதனை மிக அவசியம். நெல், கடலை போன்றவைகளுக்கு

அரையடி ஆழம், கரும்பு, வாழை போன்றவைகளுக்கு ஒரு அடி ஆழம், தென்னை, மா போன்றவைகளுக்கு மூன்றடி ஆழம் தோண்டி மண்மாதிரி எடுக்க வேண்டும் என்று விளக்கினர்.

இதில் காவிரிப்பூம்பட்டினம், வானகிரி, மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம், கீழ்வேளூர், வேளாங்கண்ணி, சீர்காழி, கும்பகோணம் ஆகிய பகுதிகளை சேர்ந்த பெண்கள் உட்பட சுமார் 30 பேர் பயிற்சி பெற்றனர். முடிவில் ஆராய்ச்சி நிறுவன அலுவலர் சசிதரன் நன்றி கூறினார்.

**வயல் தின விழாவில் சாமந்தி மலர் சாகுபடி பயிற்சி விவசாயிகள் பங்கேற்பு**

**காரைக்கால்,** : காரைக்கால் அருகே வயல் தின விழாவில் சாமந்தி மலர் சாகுபடி நுணுக்கங்களை விவசாயிகளுக்கு வேளாண் அலுவலர்கள் வழங்கினர். காரைக்கால் மாதூர் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில், கோட்டுச்சேரி திருவேட்டக்குடி கிராமத்தில் சாமந்தி மலர் சாகுபடி குறித்த வயல்தின விழா நடைபெற்றது. திருவேட்டக்குடி நீலமேகம் வயலில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, வேளாண் அறிவியல் நிலைய தலைவர் சுரேஷ் தலைமை வகித்தார். முதல்வர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியை நிலையத்தலைவர் சுரேஷ் தொடங்கி வைத்து பேசியது: வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் பல்வேறு பயிற்சி முகாம்கள் நடத்தி வருகிறோம். அதன் ஒரு பகுதியாக விவசாயிகளை சம்பந்தப்பட்ட பகுதிக்கே அழைத்துசென்று இதுபோன்ற சிறப்பு பயிற்சிகளை வழங்கி வருகிறோம். விழிதியூர், நெடுங்காடு, வரிச்சிக்குடி, உள்ளிட்ட 10 கிராமங்களில் இது மாதிரியான முன்னோடி செயல் திட்டங்கள் உள்ளது. விவசாயிகள் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு தொழில் நுட்பங்களை கற்று, தனித்திறமை வளர்த்துக்கொண்டு அதன் மூலம் அதிக லாபம் பெற முன் வர வேண்டும் என்றார்.

தொடர்ந்து, சாமந்தி மலர் சாகுபடியின் நுணுக்கங்களை, தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர்கள் சர்மிளா, சுமதி ஆகியோர் விளக்கி கூறியது: வடிகால் வசதியுடைய நிலங்களை கொண்ட விவசாயிகள் இதனை சாகுபடி செய்து அதிக லாபம் பெறலாம். நடவு செய்ததன் முதல் 35 நாள் முதல் 140 நாள் வரை 25 முதல் 30 டன் வரை மகசூல் பெறலாம். தக்காளி, கத்திரி, வெண்டை ஆகிய

பயிர்களில் சாமந்தியை பொறிப்பயிராக பயிரிட்டு, பழத்துளைப்பான் மற்றும் காய்துளைப்பான் தாக்குதலை குறைக்க இயலும் என்றனர்.

நிகழ்ச்சியில், மாவட்ட கூடுதல் வேளாண் இயக்குனர் மதியழகன், இணை வேளாண் இயக்குனர் முகமது உஸ்மான், உழவியல் தொழில் நுட்ப வல்லுநர் செந்தில்குமார், மீன்வள தொழில்நுட்ப வல்லுநர் விஜயகுமார் மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**கோமாரி நோய் தடுப்பு முகாம் 7800 மாடுகளுக்கு ஒரே வாரத்தில் தடுப்பூசிகள்**

**நத்தம்,** :நத்தம் பகுதியில் நடந்த கோமாரி நோய் தடுப்பு முகாமில் ஒரே வாரத்தில் 7800 மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

திண்டுக்கல் மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை மூலம், நத்தம் தாலுகா அளவில் நத்தம், கோட்டைப்பட்டி, லிங்கவாடி, குட்டுப்பட்டி, சிறுகுடி, கோசுகுறிச்சி மற்றும் செந்துறை ஆகிய பகுதிகளில் உள்ள கால்நடை மையங்களில் 6வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் ஒரு வாரம் நடந்தது.

இதில் கறவை பசுக்கள்,காளை மாடுகள் மற்றும் கன்றுக்குட்டிகள் உள்ளிட்ட 7800 பசுவினங்களுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டது. அந்தந்த பகுதி கால்நடை உதவி மருத்துவர்கள், உதவியாளர்கள் இந்த பணியில் ஈடுபட்டிருந்தனர். இந்த முகாம் வருகிற 21ந் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி விவசாயிகள் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மஞ்சளாறு நீர்பிடிப்பு பகுதியில் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

**தேவதானப்பட்டி,** :தேவதானப்பட்டி அருகே உள்ள மஞ்சளாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதியில் நல்ல மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கடந்த இரண்டு வருடங்களாக மஞ்சளாறு அணை பாசனத்தை நம்பியுள்ள நெல் வயல்கள் அனைத்தும் தரிசு நிலங்களாக உள்ளன. ஆங்காங்கே கிணற்று பாசனம் மூலம் விவசாய பணிகள் நடைபெற்று வருகிறது. கடும் வறட்சியால் மஞ்சளாறு அணையை நம்பியுள்ள கிராமங்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு நிலவிவந்தது.

இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக மஞ்சளாறு அணை நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை பெய்து வருகிறது. நேற்று இப்பகுதியில் 14 மில்லி மீட்டர் அளவிற்கு மழை பெய்தது.

அணைக்கு வினாடிக்கு 8 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. மழை நீடித்தால் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்கும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். தொடர் மழையால் இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். மேலும் குள்ளப்புரம், எருமழைநாயக்கன்பட்டி, சில்வார்பட்டி, ஜெயமங்கலம், மேல்மங்கலம் ஆகிய பகுதிகளிலும் நல்ல மழை பெய்தது. இப்பகுதியில் பருத்தி, கரும்பு, வாழை, மக்காச்சோளம், எள், வெற்றிலை கொடிக்கால் என அனைத்து தரப்பு விவசாயிகளும் மகிழ்ச்சியில் உள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பிப்ரவரியில் புண்ணாக்கு ஏற்றுமதி 53 சதவீதம் குறைந்தது**



**புதுடெல்லி,**

பிப்ரவரியில் புண்ணாக்கு ஏற்றுமதி 53 சதவீதம் சரிவடைந்து 3.07 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. லத்தீன் அமெரிக்கா போன்ற வெளிநாடுகளைக் காட்டிலும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் புண்ணாக்கு விலை

அதிகமாக உள்ளதே இதற்கு காரணமாகும். ஆசியா கண்டத்தில் சோயா புண்ணாக்கு ஏற்றுமதியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. பிப்ரவரியில் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 68 சதவீதம் குறைந்து 1.84 லட்சம் டன்னாக உள்ளது. ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும்போது ஏற்றுமதி 49.6 சதவீதம் சரிவடைந்துள்ளதாக தெரிகிறது. சோயாபீன் உற்பத்தியில் மத்தியபிரதேசம் முதலிடத்தில் உள்ளது. மகாராஷ்டிரா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் இரண்டாவது, மூன்றாவது இடங்களில் உள்ளன. கடுகு, பருத்தி விதை, எள் உள்ளிட்ட பல்வேறு எண்ணெய் வித்துக்களிலிருந்து எண்ணெய் எடுத்த பிறகு கிடைக்கும் புண்ணாக்கு கால்நடை தீவனமாகவும், விளைநிலங்களில் உரமாகவும் பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக தென்கிழக்கு ஆசிய நாடுகள் நம் நாட்டிலிருந்து புண்ணாக்கை அதிகம் இறக்குமதி செய்கின்றன. புண்ணாக்கு ஏற்றுமதியை பொறுத்தவரை தென்கிழக்கு ஆசிய நாடுகள்தான் நமது முக்கிய சந்தைகளாக உள்ளன என்றாலும் ஐரோப்பிய நாடுகள் மற்றும் பிற மேலை நாடுகளுக்கும் கூட புண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடந்த நிதி ஆண்டில் (2012–13) ஒட்டுமொத்த அளவில் புண்ணாக்கு ஏற்றுமதி 14.3 சதவீதம் குறைந்து 48 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது. இந்திய புண்ணாக்கில் ஆபத்தான ரசாயனம் உள்ளது என புகார் கூறி, சீனா தடை விதித்ததே இதற்கு முக்கிய காரணமாகும்.

**சின்னவெங்காயம் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி**



**மொரப்பூர்,**

தர்மபுரி மாவட்டம் மொரப்பூர் அருகே உள்ள சின்னாகவுண்டம் பட்டி கிராமத்தில் சின்னவெங்காயம் சாகுபடி குறித்து பண்ணை பயிற்சி நடைபெற்றது. இந்த பயிற்சி முகாமில் பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் இந்துமதி, வேளாண்மை உதவி இயக்குனர் ராஜமாணிக்கம், வேளாண்மை அலுவலர் சகாயராணி, உதவி வேளாண்மை அலுவலர்கள் மணிவண்ணன், தவமணி, தோட்டக்கலை உதவி வேளாண்மை அலுவலர் வடிவேல் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சியில் சின்ன வெங்காயம் நாற்று விட்டு நடும் தொழில் நுட்ப பயிற்சி, மண் மாதிரி எடுத்தல், உரம் இடுதல், ஒருங்கிணைந்த உர நிர்வாக மேலாண்மை மற்றும் பூச்சி நோய் குறித்து விளக்கி கூறி செயல் விளக்கம் செய்து காண்பித்தனர். பயிற்சி முகாமில் விவசாயிகளுக்கு வேளாண்மை தொழிற் நுட்பம் குறித்து கையேடு, பயிற்சி கையேடு வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட பணியாளர் கிருஷ்ண மூர்த்தி செய்திருந்தார்.

**மசினகுடி பகுதியில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தீவிரம்**

**மசினகுடி,**

மசினகுடி பகுதியில் உள்ள கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

<u>கால்நடைகள்</u>

மசினகுடி பகுதியில் மாயார், மாவனல்லா, வாழைத் தோட் டம், சிறியூர், ஆனைக்கட்டி, செம்மநத்தம், பூதநத்தம், பொக்காபுரம் உள்ளிட்ட பல் வேறு கிராமங்கள் உள்ளன. இந்த கிராமங்களில் உள்ள ஏராளமானோர் மாடு,எருமை, ஆடு போன்ற கால் நடைகளை வளர்த்து வருகின்றனர். இந்த கால்நடைகள் வனப் பகுதி களிலும் மேய்ச்சலுக்கு விடப் படுகிறது.

இந்த நிலையில் கால்நடை களுக்கு ஏற்படும் நோயானது வன விலங்குகளையும் தாக்க வாய்ப்பு உள்ளது. எனவே கால்நடைகளில் இருந்து வன விலங்குகளுக்கு நோய் பரவா மல் இருக்க ஆண்டு தோறும் வனத்துறையினர் மற்றும் கால்நடை

துறையினர் இணைந்து மசினகுடி பகுதி யில் உள்ள கால்நடைகளுக்கு நோய் தடுப்பூசி போடுவது வழக்கம்.

<u>கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தீவிரம்</u>

இந்த நிலையில் தற்போது நீலகிரி மாவட்டம் கால்நடை பராமரிப்பு துறை மற்றும் சீகூர், சிங்காரா வனத்துறை யினர் இணைந்து கடந்த சில நாட்களாக மசினகுடி பகுதி யில் உள்ள கால்நடை களுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணியை மேற் கொண்டு வருகின்றனர். மாடு, எருமை, செம்மறி ஆடு போன்ற கால்நடைகளுக்கு சிங்காரா வனச்சரகர் ஞான தாஸ் தலைமையில் கால்நடை டாக்டர் வினோத் குமார், உதவியாளர் நாராயணன் மற்றும் வனவர் போரன், வன காப்பாளர்கள் சித்தராஜ், தங்கராஜ் ஆகியோர் கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணியினை தினந்தோறும் மேற்கொண்டு வருகின்றனர்.

<u>முதுமலை புலிகள் காப்பகம்</u>

தற்போது ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு உள் ளது. மீதம் உள்ள கால் நடை களுக்கு கோமாரி நோய் தடுப்பூசி விரைவில் போடப் படும் என கால்நடை டாக்டர் தெரிவித்தார். இதனையடுத்து முதுமலை புலிகள் காப்பக பகுதியில் உள்ள கால்நடைகளுக்கும் கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தொடங்கப்பட உள்ளது.

**குடவாசல் பகுதி ஆறுகளில் நீர்மூழ்கி தடுப்பணை அமைக்கும் பணி**



குடவாசல் பகுதி ஆறுகளில் நீர்மூழ்கி தடுப்பணை அமைக்கும் பணி தொடங்கியது.

நீர்மூழ்கி தடுப்பணை

திருவாரூர் மாவட்டம் குடவாசல் பகுதியில் அரசலாறு, திருமலைராஜன் ஆகிய ஆறுகள் ஓடுகின்றன. இந்த ஆறுகளில் நீர்மூழ்கி தடுப்பணைகள் அமைக்கப்பட உள்ளன. இதற்காக பூமி பூஜை போடும் நிகழ்ச்சி கூந்தலூர், விஷ்ணுபுரம், சரபோஜிராஜபுரம் ஆகிய 3 ஊராட்சிகளிலும் நடைபெற்றது. இதில் கூந்தலூர், விஷ்ணுபுரம் ஆகிய ஊராட்சிகளில் அரசலாற்றிலும், சரபோஜிராஜபுரத்தில் திருமலைராஜனாற்றிலும் தடுப்பணை கட்டும் பணி தொடங்கியது.

பூமி பூஜை

கூந்தலூர் அரசலாற்றில் நீர்மூழ்கி தடுப்பணை அமைக்கும் பணிக்கான பூமி பூஜை ஊராட்சி மன்ற தலைவர் செந்தில்பாண்டியன் தலைமை தாங்கினார். பூமி பூஜையை தொடர்ந்து கட்டுமான பணிகள் தொடங்கின. நிகழ்ச்சியில் இதேபோல் விஷ்ணுபுரத்தில் ஊராட்சி மன்ற தலைவர் பஷீர்முகமது தலைமயிலும், சரபோஜிபுரத்தில் ஊராட்சி மன்ற தலைவர் சுலோச்சனா தலைமையிலும் பூமி பூஜைகள் நடைபெற்றன. நிகழ்ச்சியில் குடவாசல் ஒன்றிய ஆணையர்கள் பாலகுரு, விஜயகுமார், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் புருகானுதீன், சண்முகம், கூட்டுறவு சங்க தலைவர் ஏசுராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**ஆவுடையார்கோவில், திருமலைராயசமுத்திரத்தில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**

**ஆவுடையார்கோவில்,**

ஆவுடையார்கோவில் அருகே பாண்டிபத்திரம் கிராமத் தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந் தது. முகாமில் ஆவுடையார் கோவில் கால்நடை மருத்துவர் முத்துதுரை தலைமையில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. இந்த முகாமில் பாண்டிபத்திரம் ஊராட்சி மன்ற தலைவர் ஆத்மநாதன், ஆவுடையார்கோவில் தொடக்க கூட்டுறவு சங்கத் தலைவர்

கிருஷ்ணமோகன், பாண்டிபத்திரம் ராஜாத்தம்பி, சிவதேவி சேதுராமன், சவுந்தரராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். முகா மில் ஏராளமான கால்நடை களுக்கு தடுப்பூசி போடப்பட் டது.

இதேபோல் திருவரங் குளம் அருகே உள்ள திருமலை ராயசமுத்திரத்தில் தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் கோமாரி தடுப்பூசி முகாம் நடைபெற்றது. முகாமிற்கு கால்நடை மருத் துவர் பிரகாஷ் தலைமை தாங் கினார். கால்நடை ஆய்வாளர் குணசேகரன், கால்நடை பரா மரிப்பு உதவியாளர் ஜெக நாதன் ஆகியோர் 300–க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர்.

**கோமாரி நோய் தடுப்பு முகாம்**



**குன்னம்,**

மூங்கில்பாடி ஊராட்சியில் கோமாரி நோய் தடுப்பு முகாம் கால்நடை பராமரிப்பு துறை சார்பாக நடைபெற்றது. முகாமை கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குனர் மனோகரன் தொடங்கி வைத்தார்.முகாமில் விவசாயிகளுக்கு கோமாரி நோய் தடுப்பு ஊசியின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைக்கப்பட்டு 460 மாடுகளுக்கு தடுப்பு ஊசி போடப் பட்டது. முகாமில் குன்னம் கால்நடை உதவி மருத்துவர் செந்தில்குமார். வங்கி மேலாளர் பாபுபவுல், மூங்கில்பாடி ஊராட்சி மன்ற தலைவர் பிரியா, பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க செயலாளர்

ராஜாராம், கால்நடை ஆய்வாளர் கள், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள், ஆவின் கிராம நிலை கருவூட்டல் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**கால்நடைகளுக்கான இலவச கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**

**விருதுநகர்,**

விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் கால் நடைகளுக்கான இலவச கோமாரி நோய் தடுப்பூசி முகாமிற்காக கால்நடை மருத்துவர்கள் அடங்கிய சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக கலெக்டர் ஹரிஹரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஒரு செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

<u>தடுப்பூசி முகாம்</u>

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட கிராமங்கள் மற்றும் குக்கிரா மங்களிலும், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சி வார்டு பகுதிகளிலும் தேசிய கோமாரி நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் பசுக்கள், எருமைகள் மற்றும் 4 மாதம் ஆன இளங்கன்று களுக்கு கடந்த 1-ந்தேதி முதல் இலவச கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்று வருகிறது. விருதுநகர் மாவட் டத்தில் மொத்தம் 2,23,960 பசுக்கள், எருமைகள் மற்றும் 4 மாதம் ஆன இளங்கன்றுக ளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்படுகிறது.

இந்த முகாம்களுக்காக தமிழ் நாடு அரசு கால்நடை பரா மரிப்புத்துறையின் மூலம் கால்நடை மருத்துவர்கள் அடங்கிய சிறப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டு உள்ளன. இந்த தடுப்பூசி போடும் பணி யில் ஈடுபட்டுள்ள கால் நடை பராமரிப்பு துறை மருத் துவர்கள் மற்றும் இதர பணியாளர்கள் அடங்கிய சிறப்புக் குழுக்கள் மாவட் டத்தில் உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும், நகர்ப்பகுதி வார்டுகளிலும் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரையும், மாலை 3 மணி முதல் 5 மணி

வரையும் கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணியை மேற்கொண்டு வருகின்றனர். எனவே விருதுநகர் மாவட்டத் தில் உள்ள அனைத்து விவசா யிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் இம்முகாமினை பயன்படுத்தி தங்களது பசுக் கள், எருதுகள், எருமைகள், இளங்கன்றுகளுக்கு இலவச கோமாரி நோய் தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.